# உடுமலைப்பேட்டை நகராட்சி

## 11.11.2019 ஆம் தேதி திங்கட் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நிரல்

**1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 09.08.2019ந் தேதிய ந.க.எண் 1875/2019/WB கடிதத்தில் நகராட்சி பகுதியினை GIS மூலம் நகர வரைபடம் தயார் செய்து அந்த வரைபடத்தில் வார்டுகள், வார்டுகள் எல்லைகள், சாலைகள் பெயர், அளவு, பூங்காக்கள், நகராட்சி கட்டடங்கள், பள்ளிகள், கழிப்பறைகள், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள், MCC நீர்த்தேக்கத்தொட்டிகள், நீர் நிலைகள் (ஓடை), குட்டை, சுகாதார நிலையங்கள், அங்கன்வாடிகள், கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் ஆகியவற்றையும் அவற்றின் நகரளவு எண்கள் ஆகிய விபரங்களை தயார் செய்து 3 நகல்கள் மென் நகலாக வழங்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்டவாறு விபரங்களை நகர வரைபடத்தில் தயார் செய்து மென் நகல்கள் எடுக்கவும், மேற்கண்ட பணியினை உடனே மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1875/2019/எப்1

**2**

உடுமலைப்பேட்டை நகராட்சியில் உதவி திட்ட அமைப்பாளர் குறிப்பிட்ட இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கனிணிகள் மற்றும் பிரிண்டர்கள் போதிய அளவில் இல்லாத காரணத்தினால் பிரின்டர்கள் கனிணிகள் மற்றும் அதன் மின் உதிரிபாகங்கள் புதியதாக விநியோகம் செய்யும் பணிக்கு ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று 07.11.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்.

மதிப்பீட்டுத்தொகை ரூ.148730/-

| | | |
|---|---|---|
| 1 | M/S Sagar Electricals, Pollachi | %.148542/- |
| 2 | M/S Syscon Syston, Coimbatore | %.151048/- |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டுத்தொகையை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள M/S Sagar Electricals, Pollachi என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்..

ந.க.எண் 1959/2019/இ1

**3**

உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட ராஜேந்திரா சாலையிலுள்ள நகராட்சி வாரச் சந்தையில் போதுமான கழிப்பறை வசதி இல்லாததால் வாரச்சந்தைக்கு வரும் பொதுமக்கள், வியாபாரிகள் இயற்கை உபாதைகளுக்கு மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள். இதனால் திறந்த வெளியில் அசுத்தம் ஏற்படுத்தி வருவதால் அங்கு வரும் பொதுமக்களுக்கு சுகாதார சீர் கேடுகள் வரவாய்ப்புகள் உள்ளது. எனவே மேற்படி குறையினை நிவர்த்தி செய்ய ஏதுவாக வாரச்சந்தையில் புதியதாக சுகாதார வளாகம் அமைப்பதற்கு ரூ.8.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு செலவினம் மேற்கொள்ள அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 2300**/2019/இ1

**4**

உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13, பழைய அக்ரஹாரம் வீ தியில் உள்ள சிறுபாலமானது சேதமடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் மிகுந்த இடையூறாக உள்ளது. எனவே

| | |
|---|---|
| | மேற்கண்ட சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலம் அமைக்க ரூ.0.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு செலவினம் மேற்கொள்ளவும் தனி அலுவலர் மற்றும் ஆணையரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** - மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் 2021**/2019/இ1 |
| 5 | உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை டவுன், காந்தி நகர் அஞ்சல் N.S. லே அவுட், கதவு எண் 6ல் வசிக்கும் திருமதி,S.காயத்ரிதேவி மற்றும் ஒரு நபர் த/பெ. (லேட்) சாமிநாதன் என்பவர்களால் மாண்பமை கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தாராபுரத்தில் O.S No. W.P.417/2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் திருப்பூர் முதன்மை மாவட்ட நீதிமன்ற வழக்கறிஞர் திரு.கே. ராமகிருஷ்ணன் ஆஜராகி நடத்தித் தரவும், அதற்குண்டான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்** 273/2019/**எப்**1 |
| 6 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான உரம் தயாரிக்கும் உரக்கிடங்கில் EB மெயினிலிருந்து, உரம் தயாரிக்கும் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ள பேனல் போர்டு வரை மின்இணைப்பிற்காக பதிக்கப்பட்டிருந்த மின்கேபிள் பழுதடைந்த விட்டபடியால், மேற்படி இயந்திரத்தை இயக்க இயலாமல், உரம் தயாரிக்கும் பணி நடைபெறுவதில் சிரமம் ஏற்படுவதாலும், மேற்படி மின்கேபிள் பதிக்கப்பட்டு சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியாலும், புதியதாக 3.5 x 4 core x 35 sq.mm Aluminium armoued cable 60 Rmt மற்றும் அதன் மின் உதிரிபாகங்களுடன் விநியோகம் செய்து பதிக்கவும், பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.0.29 இலட்சத்திற்கும், மேற்படி பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் M/S R.S.M & Co., உடுமலைப்பேட்டை என்ற நிறுவனம் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** - மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் 2172**/2019/இ1 |
| 7 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சொத்துவரி, காலியிட வரி, தொழில்வரி , குத்தனை இனம், குடிநீர் கட்டணம் மற்றும் பாதாள சாக்கடைத்திட்டம் ஆகிய இனங்களுக்குரிய தொகைகளை செலுத்தக்கோரும் விளம்பரத்தினை ஆட்டோவில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** - மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் 2286**/2019/அ1 |
| 8 | உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு நிலவேம்பு கசாயப் பொடி விநியோகம் செய்திட 31.10.2019ல் ஒப்பந்தம் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. |

| வ. | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை (கிலோ |
|---|---|---|

| | | |
|---|---|---|
| எண் | | ஒன்றுக்கு) |
| 1. | ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங் | ரூ.1885/- + GST |
| 2. | ஸ்ரீ விநாயகா பார்மா | ரூ.2200/- + GST |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங், பொள்ளாச்சி அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பொதுசுகாதாரப்பிரிவின் அவசரம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று விநியோகம் செய்திட நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்** 2484/2019/எச்1

9 பொதுசுகாதார திடக்கழிவு மேலாண்மை பணிக்கு E.M நுண்ணுயிர் கரைசல் விநியோகம் செய்திட 31.10.2019ல் ஒப்பந்தம் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை (கிலோ ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங் | ரூ.1890/- + GST |
| 2. | ஸ்ரீ விநாயகா பார்மா | ரூ.2100/- + GST |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங், பொள்ளாச்சி அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பொதுசுகாதாரப்பிரிவின் அவசரம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று விநியோகம் செய்திட நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்** 2754/2019/எச்1

10 உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சொத்துவரி, காலியிட வரி, தொழில்வரி , குத்தனை இனம், குடிநீர் கட்டணம் மற்றும் பாதாள சாக்கடைத்திட்டம் ஆகிய இனங்களுக்குரிய தொகைகளை செலுத்தக்கோரும் விளம்பரத்தினை ஆட்டோவில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காண் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை (கிலோ ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | குமரன் சவுண்ட்ஸ் | ரூ.2500/- |
| 2. | கே.கே.எம் சவுண்ட்ஸ் | ரூ.2250/- |
| 3. | மணி வர்த்தக விளம்பரம் | ரூ.2000/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மணி வர்த்தக விலைப்புள்ளித்தொகை ரூ.2000/- குறைவாக உள்ளதால் இதனை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்** 2286/2019/அ1

11 உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்குச் சொந்தமான அபிவிருத்தி பணிசெய்யும் நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்பேரில் நகராட்சி வார்டு எண் 9ல் அமைந்துள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 6235/95/எப்1 நாள் 17.11.1998 ல் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் ராஜலட்சுமி நகர் என்று அழைக்கப்படும் பூங்கா-I (டவுன் சர்வே வார்டு எண் ‘எப்’ , பிளாக்

எண் 6, நகரளவு எண் 21, க.ச.எண் 133, 134/1, 134/3) இடத்தில் ரோட்டரி உடுமலைப்பேட்டை தேஜாஸ் பிரசிடெண்ட் ஒரு பூங்காவினை மரக்கன்றுகள் நட்டு சொட்டுநீர் பாசனம் மூலம் பராமரிக்க அனுமதி கோரி ஆணையர் அவர்களுக்கு 17.10.2019ம் தேதியன்று கடிதம் சமர்ப்பித்துள்ளனர். அதன்பேரில் மேற்படி ரோட்டரி உடுமலைப்பேட்டை தேஜாஸ் அவர்களின் சொந்தப் பொறுப்பில் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க சம்மதம் தெரிவித்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் பூங்காவினைப் பராமரிச்ச அனுமதி வழங்கலாம்.

1. பூங்கா இடத்தில் பணி மேற்கொள்ளும்பொழுது நகராட்சிப்பொறியாளர் / நகரமைப்பு அலுவலர் அவர்கள் மேற்பார்வையில் நடைபெற வேண்டும்.
2. பூங்கா இடத்தில் நிரந்தர மற்றும் தற்காலிகக் கட்டிடம் நகராட்சி அனுமதியின்றி கட்டக்கூடாது.
3. பூங்கா இடமானத பொதுப்பயன்பாட்டிற்காக நகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் எவ்வித நிபந்தனையுமின்றி , எவ்வித உரிமையும் கோராமல் உடன் ஒப்படைக்கப்பட வேண்டும்.
4. பூங்கா நுழைவாயிலில் ஆணையாளர், உடுமலைப்பேட்டை நகராட்சி எனவும், 3 ஆண்டுகால பராமப்பு மட்டும் தங்களின் பெயரும் உள்ள பனை நிரப்பப்பட வேண்டும்.
5. நகராட்சி பூங்கா மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.
6. மேற்படி பூங்காவற்கு பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்த வழிவகை செய்யப்பட வேண்டும்.
7. மேலும், மேற்படி இடம் தொடர்பாக நீதிமன்றங்களுக்கு செல்லும் பட்சத்தில் இவ்வுத்திரவு செல்லத்தக்கதல்ல.
8. நகராட்சியில் விண்ணப்பம் செய்து மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை உரிமத்தினை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.
9. பூங்கா இட உபயோகத்திற்கு மின்இணைப்பு ஆணையாளர், உடுமலைப்பேட்டை நகராட்சி என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.
10. அபிவிருத்திப் பணிக்காக செலவிடப்பட்ட தொகை எதுவும் நகராட்சியில் திருப்பி வழங்கப்பட மாட்டாது.
11. மதம் சம்பந்தமாகவோ அல்லது அரசியல் சம்பந்தமாகவோ பூங்கா இடத்தினை பயன்படுத்தக்கூடாது.

ந.எண் 2155/2019/எப்1

**ஆணையாளர்/ தனி அலுவலர்**
**உடுமலைப்பேட்டை நகராட்சி**